

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 95

யாழ்ப்பாணம் வைகாசி 4 ரபீஉல் 23 செவ்வாய்க்கிழமை (18-5-71)

நவநாகரீக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன 444
தந்தி: 'இரத்தினம்ஸ்'
50. கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.

வவனியாவில் சிறு சிறு தாக்குதல் சம்பவங்கள்

பல 'தலைவர்கள்' கைது மேலும் பலர் சரண்

கோட்டை, செவ்வாய்

வவனியாவில் இரண்டு மைல்களுக்கு அப்பால் பயங்கரவாதிகளின் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

நாடு பூராவும் பயங்கரவாதிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் குறைந்துவரும் அதேவேளையில் பல பயங்கரவாத 'தலைவர்களும்' பாதுகாப்பு படையினரிடம் சிக்கியுள்ளனர்.

மாத்தளையில் 10 பேர் சரணடைந்தும் 18 பேர் கைது செய்யப்பட்டுமுள்ளனர். மாத்தளை மாவட்டத்தில் பயங்கரவாதிகளுக்கு தலைமை வகித்ததாகக் கூறப்படும் விஜயசுந்தர என்பவரையும் பொலிசார் நேற்றுக் கைது செய்தனர்.

தெம்புகனே என்ற இடத்தின் பயங்கரவாதிகள் தலைவன் ஆர் ஏச் ஜெயதிச மாத்தறையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டான்.

மொனருகலையில் 4 பேர் கைதுசெய்யப்பட்டனர். மாத்தறையில் 3 பேர் சரணடைந்தனர் கேகாலையில் 23 பேர் காயமடைந்தனர் என்று அரசாங்கம் நேற்று அறிவித்தது

தொழில் சட்டத்தை மீறும் முதலாளிகளுக்கு கடும் தண்டனை

கோட்டை, திங்கள்

தொழில்சட்டங்களைமீறும் முதலாளிமார் கடுந் தண்டனைக்குள்ளாவார்கள் இதற்கான நடவடிக்கைகளை தொழில் பகுதி மேற்கொண்டு வருகிறது.

அநீதிக்குள்ளாகும் தொழிலாளர்களுக்கு நீதிகிடைக்கக்கூடிய விதத்தில் உறுதியான நடவடிக்கைகளை தொழில்பகுதிமேற்கொள்கிறது. சம்பளத்தகராறு வேலைநீக்கம் போன்ற பிரச்சினைகள் குறித்து அநீதி இழைக்கப்படும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

1970-ம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம், 1971 மார்ச் வரையில் முதலாளிமாருக்கு எதிராக தொழில் கோட்டில் 752 வழக்குகள் விசாரணைக்காக உள்ளன.

காலியில் ஐ. ஜி. பி.

காலி, திங்கள்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தன நேற்று விமானத்தில் காலிக்குச் சென்றார். அங்கு நேரில் நிலைமையைப் பார்வையிட்டபின் காலி மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர்.

ஊரடங்கு நேரம்

இன்று மாலை
7-30
மணி முதல்
நாளை காலை
4.30
மணி வரை

தாய்லாந்து அரிசி, சீனி: இலங்கைக்கு அன்பளிப்பு

கோட்டை, திங்கள்

அரிசியும் சீனியும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது தாய்லாந்து அரசாங்கம்! பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு இதனை தாய்லாந்து வழங்கியிருக்கிறது.

100 தொன் அரிசியும் 10 தொன் சீனியும் இதில் அடங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களுக்கும், ஆபத்துக்களுக்கும் தாய்லாந்து அரசு கவலை தெரிவித்துள்ளது.

……

சம்பளத்தில் வருமானவரி கழிக்க ஏற்பாடு

கோட்டை திங்

வருகிற அக்டோபர் மாதத்திலிருந்துவருமானவரியை மாதா மாதம் அவரவர் சம்பளத்திலிருந்து கழித்துக் கொள்ளுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது. இதற்கான மசோதா ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதும் இது நடைமுறைப் படுத்தப்படும் என்று வருமானவரி இலாகா கமிஷனர் திரு எல் பியசேன தெரிவித்தார்.

சம்பளத்திலிருந்து வருமானவரியைக் கழிக்கும் முறை அமுல் செய்யப்பட்டால் தற்போதுள்ள சுமார் 75000 பைல்கள் இல்லாமல் போய்விடும் என்றும் அவர் கூறினர்.

உற்சவம் முடிந்தது

இமையாணன், திங்கள்

உடுப்பிட்டி-இமையாணன் வல்லை வழிப்பிள்ளையார் கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று நடைபெற்ற அன்னதானத்துடன் முடிவடைந்தது. ஆறுவது உற்சவமாகிய 11-ம் திகதி விசேஷ அன்னதானமும் ஒன்பதாவது உற்சவமாகிய 14-ம் திகதி வெள்ளிக்கிழமை விசேட நாதஸ்வரக் கச்சேரியும் நடைபெற்றன.

அதிக வாடகை கொடுப்போரும் தண்டிக்கப்படுவர்

கோட்டை, திங்கள்

கூடிய வாடகையை விதிப்பவர்களும் அதேவேளையில் கூடிய வாடகையைச் செலுத்த உடன்படுபவர்களும் அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் தண்டிக்கப்படுவார்கள்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இதற்கான விதிகளை மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ அமுலுக்குக் கொண்டுவந்துள்ளார்.

வாடகைக் கட்டுப்பாட்டுச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட வீடுகளுக்கு மட்டுமன்றி இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படாத வீடுகளுக்கும் மேற்படி விதிகளின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன

இந்த விதிகளின்படி வாடகைக்கு இருப்போர் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட வாடகைக்கு அதிகமாகச் செலுத்தினால் அவர்களது செயல் குற்றமாகக் கருதப்பட்டுத் தண்டனையளிக்கப்படும். வாடகைக்கு வீடுகளை விடுவோர்களும் ஏற்கனவே விட்டுள்ளோர்களும் குறிப்பிட்ட வாடகைக்கு அதிகமாகப் பெற முற்பட்டால் அவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு நிர்மாண அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு மேற்படி குற்றச் செயல்களைக் கண்டுபிடித்து குற்றவாளிகளைக் கோர்ட்டில் ஆஜர் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விதிகளை மீறிக் குற்றம் புரிபவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக் [illegible] 500 ரூபா[illegible]லிருந்து 5000 ரூபாவரை அபராதம் விதிக்கப்படும்.

மரண அறிவித்தல்

சின்னப்பா நாகமுத்து

இவர் மாவிட்டபுரம் பெரியதம்பி சின்னப்பாவின் அன்பு மனைவியும் மன்னார் குவீன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் M K மரைக்காயர் அன் கொம்பனி பங்காளரும் ஆகிய சி. சிவலிங்கத்தினதும் திருகோணமலை இ. போ. ச டிப்போ பரிசோதகர் சி. அரசலிங்கத்தினதும் அன்புத் தாயாரும் ஆவர். மரணச்சடங்கு மாவிட்டபுரம் நிமலே ரோட் தச்சன்காடு மயானத்தில் இன்று (18-5-71) செவ்வாய்க்கிழமை பி. ப. 1 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார் உறவினர் நண்பர் யாபேருக்கும் அறியத்தருகிறோம்.

சி. கந்தப்பிள்ளை

2617

மரண அறிவித்தல்

டாக்டர் ச. குமாரசாமி

சுன்னாகம் திரு. சிவசங்கரப்பிள்ளை தம்பதிகளின் மகனும், தெல்லிப்பழை ஜோதி டிஸ்பென்சறி உரிமையாளருமான டாக்டர் ச. குமாரசாமி காலமாகிவிட்டார். இவர் ஜோதிலக்சுமியின் கணவரும், ஜெயந்தகுமார், ஆனந்தகுமார், விஜயகுமார், ரவீந்திரகுமார் ஆகியோரின் தகப்பனுமாவர். அன்னாரின் பூதவுடல் இன்று 18-5-71 செவ்வாய்க்கிழமை சுன்னாகம் முதலியார் வளவு இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக பி. ப. 3 மணிக்கு சுன்னாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தகவல் தருபவர் T. தம்பிரத்தினம் J. P. U. M.

2618

தேவை

மருதனுமடம் சந்தி-(பெற்ரேல்செட் முன்னுல்) புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கணேசபவான் ஓட்டலுக்கு கசியர் - டீமேக்கர் குசினி வேலைக்காரர் பரிமாறுபவர்கள் தேவை. விரும்புவோர் 25-5-71 திகதிக்கு முன் நேரில் சமுகம் தருக. கசியர், பிணைப்பணம் செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும். 3102

CLASS

Latest hairstyles class 3 moths Course once a week 10 Rs. per month 63A, Point-Pedro road, Anaipanthy Jaffna 2481

விற்பனைக்கு

கோழிகள்:

100 முட்டையிடும் கோழிகள் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் வேலுப்பிள்ளை முருகேசு, நெடுங்காடு, காரைநகர் என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். 3113

தேவை

ஆங்கில வைத்தியசாலையில் வேலை செய்வதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட இளைப்பாறிய பெண் அற்றெண்டன் தேவை. பகல் வேலை மட்டும். விபரங்களுக்கு: Dr. R. சோமசுந்தரம், மத்திய வைத்திய நிலையம், நெல்லியடி, கரவெட்டி. 2479

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30 பி.ப. 2-00
ஜெமினி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

ரீகல் இப்பொழுது நடைபெறுகிறது
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00
ராஜ்கபூர்—ராஜ்ஸ்ரீ — மெஹமூத்
AROUND THE WORLD
(ஹிந்தி) டெக்னிக்கலர்
இசை: சங்கர் ஜெய்கிஷன்
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய படம்

மகத்தான 52-வது தினம்
கலைசிகரம்
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி
காலை 10-30
பி. ப 2-30
மாஸ்டர் பிரபாகர்
பேபி சுமதி - லெக்ஷ்மி
நடித்த
வா ராஜா வா

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 200 மணி
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ மனோரமா
★ ரங்கராவ்
நடித்த
குமரிப் பெண்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
கை கொடுத்த தெய்வம்

லின்லி
காலை 10, பி.ப.2-00 மணி
தில்லான மோகனம்பாள்

ஹைலன்
காலை 10, பி.ப 2-00 மணி
எதிரிகள் ஜாக்கிரதை

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

அடுத்த வெளியீடு
மூன்றெழுத்து
(மர்மச் சித்திரம்)

தேவை

பாலர் பாடசாலைகளுக்கு மொன்ரசோரி பயிற்சி பெற்ற ஆசிரியைகள் தேவை. 21-ம் திகதி வெள்ளிக்கிழமை 2 மணிக்கு தராதரப்பத்திரங்களுடன் நேர் முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கவும். 'ஞானக் குழந்தை இல்லம்', நம். 1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3114

கல்வி

பெற்ருேர்களுக்கு:- 3 வயது தொடக்கம் 5 வயது வரையுள்ள பாலர்களுக்கு மொன்ரிசோரி முறையில் கல்வி பயிற்றப்படுகின்றது. பாலர் பயிற்சி பெற்ற ஆசிரியை கற்பிக்கின்ருர். மாதக்கட்டணம் ரூ. 7-50 மட்டுமே. இன்னும் சில மாணவருக்கே இடமுண்டு. விண்ணப்பிக்கவும். அன்பு பாலர் பாடசாலை, 330, கே. கே. எஸ். வீதி. (சீதா சோடாக்கம் பனியருகு) யாழ்ப்பாணம். 3112

பயிற்சி பெற்ற ஆசிரியையினுல் (By a Diploma holder) பாலர் பாடசாலை 18-ந் திகதி தொடக்கம் நடாத்தப்படும். விபரங்களுக்கு: 98/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 2480

வெங்காயத்துக்குப் பதில் 'லீக்ஸ்' கீரை

புத்தளம், திங்கள்

இப்பகுதியில் பெரிய வெங்காயத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் இங்குள்ள மக்கள் 'லீக்ஸ்' கீரையை வெங்காயத்துக்குப் பதில் பாவிக்கத் தொடங்கியிருக்கிருர்கள்

சிறு துண்டுகளாக லீக்ஸ் கீரையை நறுக்கி வெங்காயத்தைப்போல் பாவித்தால் வெங்காயத்தைவிட சிறப்பான உருசி கிடைக்கிறதாம்

நாகம்ஸ்சினிமா
சுன்னுகம்
தினசரி
காலை 10-30, பி. ப. 2-30
ஜெமினி - ஜெய்சங்கர்
நடித்த
பூவா தலையா

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி
காலை10-30, பி. ப. 2-30
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த
நேர்வழி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை10-30, பி.ப.1-30
ஜெமினி — சௌகார்ஜானகி
நடித்த
இரு கோடுகள்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m
Brig Porter
in
THE LOST CONTINENT
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர் - விஜயலக்ஷ்மி
நடித்த
சபாஷ் தம்பி

RAJAH - JAFFNA
Daily
10-00a m. 1-30&4-00p.m.
Jason Robards
Stella Stevens
in
THE BALAD OF CABLE
HOGUE

நெல்லியடிப் பட்டினசபை கேள்வி விளம்பரம்

1971-ம் ஆண்டு மேமாதம் 25-ந் திகதி 25-5-1971 முற்பகல் 10-30 மணிவரை மேற்படி பட்டினசபைத் தலைவரால் கீழ்காணும் வேலைக்கு பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து 'சீல்' வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றினதும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/-ம் பதிப்பணம் ரூபா 5/-ம் செலுத்தியதின் பேரில் 23-5-1971ந் திகதிமுற்பகல் 11-30 மணிவரை பட்டினசபைத் தலைவரால் வழங்கப்படும். உத்தியோகபூர்வமான பத்திரத்தில்கேள்விகள் அனுப்பப்படவேண்டும்.

கேள்வியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு எச் சமயத்திலும் பூரண உரிமையுண்டு. ஏனைய விபரங்கள் யாவும் பட்டினசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்:
ச. வ. தேவசகாயம்,
தலைவர்
நெல்லியடிப் பட்டினசபை
பட்டினசபை அலுவலகம்,
நெல்லியடி கரவெட்டி,
12-5-71

வேலையின் விபரம்

1. பாடசாலைவீதி(2-ம் வட்டாரம்) கல் பதித்து தார் ஊற்றுதல். 3291

அனுமதியின்றி கடை கைமாற்றம்

சீல் வைக்கப்பட்டது

குருநகர், திங்கள்

யாழ். மாநகரசபைக்கு சொந்தமான கடையை வாடகைக்கு வைத்திருந்த ஒருவர் மாநகரசபையின் அனுமதியின்றி கடையை வேருெருவருக்கு கைமாற்றி வியாபாரம் நடத்திவந்ததால் இக்கடையை காலி செய்ய வேண்டிய நிலை மாநகரசபைக்கு ஏற்பட்டது இக்கடையை நடத்தியவர்களிடையே ஏற்பட்டதகராறுல் மாநகரசபைக்கு வாடகைப் பணம் கிடைக்காததுடன் கடைநடத்தியவர்களின் தொந்தரவுகளும் இருந்து வந்ததால் இக்கடையை விட்டு வெளியேறுமாறு பல அறிவித்தல் கொடுத்தும் இவர்கள் கடையைவிட மறுக்கவே மாநகர வரியிறுப்பாளரும், பொலிசாரும் இக்கடையில் உள்சாமான்களை அப்புறப்படுத்தி ஆட்களையும் வெளியேற்றிவிட்டு கடையை பூட்டி 'சீல்' வைத்தார்கள். இச்சம்பவம் நல்லூர் சந்தையில் நடைபெற்றுள்ளது.

'மேலதிகசம்பளம் வழங்குக'

குருநகர், திங்கள்

வனபரிபாலன இலாகா தொழிலாளர்கள் 8 மணித்தியாலத்திற்கு மேல் 12 மணி நேரம் சேவை செய்வதால் கஷ்டமான நிலைமை இத்தொழிலாளருக்கு ஏற்படுகின்றது. இவர்களுக்கு மேலதிகநேர சம்பளம் வழங்க வேண்டுமெனவும், மேலதிக நேர சம்பளம் கொடுக்க முடியா நிலைமைஏற்பட்டால் மேலதிக ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்க பொது சேவை தொழிலாளர் சங்க யாழ் கிளை வனபரிபாலன இலாகாவை கேட்டுள்ளது. இதற்கான கடிதத்தை மேற்படி சங்க செயலாளர் எஸ் ஆறுமுகம் வனபரிபாலன அதிபருக்கு அனுப்பியுள்ளார்.

நியமனம்

மானிப்பாய், திங்கள்

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள கூ. மொ. வி. சலுசலா கூட்டுறவுச் சங்கங்கள், சமாஜங்கள் நடாத்தும் கடைகள், விற்பனைத்திணைக்களம் பொருட் கொள்வனவுத் திணைக்களம் நடாத்தும் கடைகள் சேகரிப்புநிலையங்கள் ஆகியவற்றின் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராக ஆசிரியர் திரு இ வேலாயுதர் வெளிநாட்டு உள்நாட்டு அமைச்சினுல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் வ ஐ மே சபை வடமாகாண கூட்டுறவு அச்சக நூற்பதிப்புச் சங்கம். யாழ். கூட்டுறவு மாகாண வங்கி, அகில இலங்கை சாந்தி சேவா சங்கம், யாழ் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் முதலிய நிறுவனங்களில் முக்கிய உறுப்பினராகவும், உத்தியோகத்தராகவும் சேவைபுரிந்துவருகிருர்.

குடியேற்றத்திட்டம்

தீவுப்பகுதி வாலிபர் ஆர்வம்

குருநகர், திங்கள்

விசுவமடு இரண்டாம் பருவம் படித்தவாலிபர் குடியேற்றத்திட்டத்திற்கு தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவிலிருந்து காணிகோரி விண்ணப்பித்துள்ள மொத்த விண்ணப்பங்கள் 412 இவற்றில் மண்டைதீவுக் கிராம சேவையாளர் பிரிவிலிருந்து 125 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான காணிக்கச்சேரி இம்மாதம் 26-ம் திகதி தீவுப்பகுதி காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது. மண்டைதீவிலிருந்து அதிகவிண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளதால் இவ்விண்ணப்பதாரருக்கான காணிக்கச்சேரியை இக்கிராமத்திலேயே நடத்துமாறு அரசாங்க அதிபரையும் தீவுப்பகுதி எம். பியையும் மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம் கேட்டிருக்கிறது

ஹினிதுமவில் பயங்கரவாதிகளுக்கு முற்றுப்புள்ளி

கோட்டை, திங்கள்

ஹினிதும தேர்தல் தொகுதியிலிருந்து பயங்கரவாதிகள் முற்ருக ஒழிக்கப்பட்டுவிட்டார்களென்றும், கிராம மக்கள் இவர்களை ஒழித்துக் கட்டுவதற்கு உதவி அளித்தார்களென்றும் ஹினிதும எம். பி. ஹென்றி திஸநாயக்கா தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஒத்தப்புவ என்ற இடத்தில் பயங்கரவாதிகள் முகாம் பிடிப்பட்டதை அடுத்து பயங்கரவாதிகள் நடவடிக்கை வெகுவாகக் குறைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அரபுக் குடியரசில் மேலும் ஒரு மந்திரி பதவி நீக்கம்

ஆட்சி பீடத்தில் அதிபர் கை ஓங்குகிறது

கெய்ரோ, மே 17

ஐக்கிய அரபுக் குடியரசின் மற்றுமோர் அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஐ. அ. குடியரசு ஜனாதிபதி அன்வர் சதாத் செய்தித் தொடர்பு அமைச்சரை பதவி நீக்கம் செய்துள்ளார். இவருடன் இதுவரை ஏழு அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் உப ஜனாதிபதி அலிசாப்ரி உட்பட நூற்றுக்கு மேற்பட்ட உயர்மட்ட அதிகாரிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி திரு. சதாத், பொலிஸ் படை அதிகாரிகளையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் கண்டு பேச்சுவார்த்தை நடத்தினர். அவர்கள் மத்தியில் பேசுகையில், நாட்டின் சோஷலிசத் திட்டங்களை நடைமுறைப்படுத்த எல்லா அதிகாரிகளும் ஒத்துழைக்கவேண்டும். ஐ. அ. குடியரசுக்கும் இஸ்ரேலுக்குமிடையே உள்ள சூயஸ்கால்வாய் எல்லைப் பிரச்னை போலவே உள்நாட்டு எல்லைகளும் பாதுகாக்கப்படவேண்டும். நாட்டின் உயர்மட்டத்தில் ஏற்படவிருந்த சதிமுயற்சியால் எல்லைப்புறங்களிலுள்ள படையினர் சோர்ந்துவிடக்கூடாது. எனது பேச்சையும் நடவடிக்கைகளையும் ஒலிப்பதிவு செய்வதற்கு எனது வீட்டுக்கு 2 ரேப்றிக்காடர்களைக்கொண்டுவந்தவர் கனிஷ்ட பொலிஸ் அதிகாரியேயாகும். எமது கௌரவத்தை சமாதான மூலம் நிலைநாட்ட முயலுவோம். அதேநேரத்தில் முப்படையும் தயார்நிலையில் இருக்கவேண்டும் என்றார்.

இம்மாநாட்டில் பொலிஸ் படை அதிகாரிகளும் புதிதாக நியமிக்கப்பட்ட உள்துறை அமைச்சரும் ஜனாதிபதி திரு. அன்வர் சதாத்துக்கு தமது முழு ஆதரவையும் தெரிவித்துக்கொண்டனர்.

சோவியத் யூனியன் 480,000 டாக்டர்கள்

மாஸ்கோ, மே 17

1969-1970 கால கட்டத்தில், சோவியத் யூனியன் 151,000 மாணவர்கள், மருத்துவத்துறையில் டாக்டர் பட்டம் பெற்றனர். ஆஸ்பத்திரி படுக்கைகளின் எண்ணிக்கையில் 260,000 அதிகரித்தது.

வரும் ஐந்தாண்டுகளில் 800-1200 படுக்கைகளுடன் மிகப் பெரிய விசேட ஆஸ்பத்திரிகள் சோவியத் நகரங்களில் நிர்மாணிக்கப்படும். இருதய அறுவைசிகிச்சை உட்பட, எல்லாவித சிகிச்சைகளும் இந்த ஆஸ்பத்திரிகளில் அளிக்கப்படும். 600-800 படுக்கைகளைக்கொண்ட இதுபோன்ற ஆஸ்பத்திரிகள் கிராமங்களில் நிறுவப்படும்.

வரும் ஆண்டுகளில் மருத்துவ ஊழியர்களுக்காக பயிற்சியில் அபிவிருத்திகள் செய்யப்படும். சோவியத் மருத்துவ மாணவர்கள் இப்பொழுது கினரியில் 6 ஆண்டுகளில் பயிலுகிறார்கள். இனிமேல் ஒரு பெரிய மருத்துவக்கூடத்தில் மேலும் ஓராண்டு விசேடப் பயிற்சி பெற வேண்டும்.

தாவடி, திங்கள்

கொக்குவில் புகையிரத நிலைய வீதியில் உள்ள கோணாவளை வயிரவர் ஆலயத்தின் கட்டிட வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. விரைவில் பூர்த்தியாகும் எனத்தெரியவருகிறது.

அடுத்த மாதம் யாஹ்யாகான் டாக்கா செல்வார்

ராவல்பிண்டி, மே 17

கிழக்குப் பாகிஸ்தானுக்கு அடுத்த மாதம் ஜனாதிபதி யாஹ்யாகான் விஜயம்செய்வார் எனச் சொல்லப்படுகிறது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நூருல் அமீன் ராவல்பிண்டிக்குச் சென்று ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின் அவர் விடுத்த வேண்டுகோளை அடுத்து ஜனாதிபதி டாக்காவுக்கு விஜயம்செய்ய ஒத்துக்கொண்டதாக டாக்கா திரும்பியதும் திரு. அமீன் கூறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

— —

குவெய்த்திலிருந்து 20 ஆயிரம் மக்கள் நாடுகடத்தப்பட்டனர்

குவெய்த்நகர், மே 17

குவெய்த்திலிருந்து இதுவரை 20 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் நாடுகடத்தப்பட்டார்கள். இவர்கள் நாட்டு நலனுக்கு விரோதமாக நடந்தார்கள் அல்லது வெளிப்பகுதியிலிருந்து நாட்டில் குழப்பம் விளைவிப்பதற்காக நாட்டுக்குள் நுழைந்தவர்கள் என்ற தன்பேரில் இவர்கள் நாடுகடத்தப்பட்டார்களாம்.

இச்செய்தியை குவெய்த் உள்துறை அமைச்சர் தேசிய சட்டசபையில் தெரிவித்தார்.

தாவடி, திங்கள்

பயங்கரவாதிகளினால் காயமுற்று அவஸ்தைப்படும் பாதுகாப்புப்படையினருக்கு உதவுமுகமாக கொக்குவில் தபால் கந்தோர் ஊழியர்களான திரு. வி. பாலராஜா திரு. இ. பரமேஸ்வரலிங்கம் ஆகியோர் இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

பாலிய குற்றவாளிகளுக்கு புனர் வாழ்வு

பிரிட்டனில் புதியமுறை

லண்டன் மே 16

சமூக விரோதக் குற்றங்கள் புரியும் இளம் சந்ததியினரைச் சீர்திருத்துவதென்பது இன்று சகலநாடுகளையும் எதிர்நோக்கும் ஒரு பெரும் பிரச்னையாக தலைதூக்கியுள்ளது. குற்றம் புரியும் சிறுவர்களைக் கடுமையாகத் தண்டித்து சிறைக்கு அனுப்பி சமூகக் குற்றவாளியென ஒரு களங்கத்தை ஏற்படுத்திவிடுவதால் அவர்களிடம் மனமாற்றத்தை எதிர்பார்க்கமுடியாது. பாலியவயதினர் ஏன் குற்றங்களைப் புரிகிறார்கள், அவர்களைக் குற்றம் புரியத் தூண்டும் நிலைகள்யாவை, அவர்களது குடும்ப நிலவரம் மற்றும் சூழலால் ஏற்பட்ட பாதிப்புகள் எவ்வகையானது இப்படியாக இளம் குற்றவாளியின் சமூகப் பின்னணியையும், மனப்பாங்கினையும் ஆராய்ந்தறிந்து அதற்கேதுவான முறையில் சீர்திருத்த நடவடிக்கையை மேற்கொள்ளும் புதியமுறையொன்று இப்பொழுது பிரிட்டனில் கையாளப்பட்டு வருகிறது. பிஞ்சு உள்ளங்களில் உண்மையான மனோமாற்றத்தை ஏற்படுத்தவழிவகுக்கும் இந்தத்திட்டம் பிரிட்டனில் பெரும் வரவேற்பைப் பெற்றிருப்பதுடன் பாலிய குற்றங்களைத் தடுப்பதிலும் வெற்றிகண்டுள்ளது.

'பாலிய குற்றவாளிகள் புனர்வாழ்வுத்திட்டம்' என அழைக்கப்படும் இப்புதிய திட்டத்திற்கு மூலபிதாவாக இருந்தவர் ஸ்கொட்லண்ட் யார்ட் இரகசிய பொலிஸ் இலாகாவைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜோர்ஜ் கேர்க் என்பவராவர். குற்றம் குற்றம்தான் என்று வாதாடி சிறுவர்களை கடுமையாகத் தண்டிப்பதுடன், செய்த குற்றத்தையும் பதிவுசெய்து வாழ்நாள் பூராகவும் குற்றவாளிகள் ஏட்டில் அவர்களை வைத்திருப்பது ஒரு தவறான முறையென அவர் எண்ணினார். குற்றம் புரிந்தவர்களின் பின்னணியை படித்தறிந்து குற்றங்களைப் புரியத்தூண்டும் காரணங்களை உணர்ந்து அவர்களுக்கு ஆலோசனை அளித்து மனிதாபிமான முறையில் அவர்களைச் சீர்திருத்தவேண்டிய அவசியத்தை அவர் உணர்ந்தார். இதனைச் செயல்படுத்த ஒரு திட்டத்தை அவர் உருவாக்கினார்.

முதலில் பாலிய குற்றவாளிகளைப் பொறுமையுடனும் இரக்க சிந்தனையுடனும் கையாளக்கூடிய பொலிஸ் அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விசேஷ பயிற்சி அளித்தார். இவருடைய இந்தப் புனர்வாழ்வுத் திட்டத்திற்குப் பொதுமக்களும், பாடசாலை ஆசிரியர்களும் சமூக சீர்திருத்த வாதிகளும் கைகொடுத்து உதவினர். எல்லாவற்றிற்கும் மேலாக பெற்றோர்கள் தம் முழு ஆதரவையும் நல்கினர். 'பாலிய குற்றவாளிகள் புனர்வாழ்வுத் திட்டம்' என்றழைக்கப்பட்ட இப்புதிய முயற்சிக்கு ஸ்கொட்லண்ட்யாட் இரகசியப் பொலிசாரும் உதவியளிப்பதற்கு முன்வந்தனர்.

சிறுவன் ஒருவன் குற்றம் புரியும் பட்சத்தில் இத்திட்டத்தில் அங்கம் வகிக்கும் பொலிஸ் அதிகாரிகள் இவ்விளம் குற்றவாளிகள் பற்றிய சகல தகவல்களையும் திரட்டுகின்றனர். பின்பு அவ்விளம் குற்றவாளியையும் அவனது பெற்றோரையும் அழைத்து அவன் புரிந்த குற்றத்தின் தன்மையையும் அதனைச் செய்யத்தூண்டிய காரணங்கள் யாவற்றையும் நேரடியாக எடுத்துக்கூறி அவனுக்குத் தகுந்த ஆலோசனை [illegible]கின்றனர். இத்துடன் பொலிசாரின் கடமை முடிந்துவிடுவதில்லை. குடும்பச் சூழ்நிலை காரணமாக இக்குற்றவாளி குற்றம் செய்திருப்பின் அந்தக் குடும்பக் குறைகளையும் இவர்கள் நிவர்த்தி செய்துவிடுகின்றனர். மேலும் இப்பாலிய குற்றவாளிகள் புரிந்த குற்றங்கள் பொலிஸ் ஏடுகளில் பதியப்படுவதில்லை.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முதல் ஒன்பது மாதங்களில் மட்டும் மொத்தம் 18,792 பாலிய குற்றவாளிகள் விசாரணைக்குள்ளாகி சீர்திருத்தம் செய்யப்பட்டனர். குற்றம் புரியும் சிறுவர்கள் பல ரகமானவர்கள். குடும்ப வறுமை, மனோவிகாரம், தீயநட்பு, அறியாமை, குறும்புக்குணம் இப்படிப் பல்வேறு காரணங்களால் உந்தப்பட்டு வாலிப வயதினர் குற்றங்களைப் புரிவதாக இந்த விசாரணைகளின்போது புலனாகியது. அப்பாவிச்சிறுவர்களும் சிலசமயங்களில் பாரதூரமான குற்றங்களைப் புரிந்துள்ளதாகப் பொலிஸ் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

அவர்கள் கூறும் கீழ்க்கண்ட சம்பவம் ஒரு நல்ல உதாரணம்.

கண்ணையும் மனதையும் கவரும் விளையாட்டுப்பொருட்களை விற்கும் ஒரு கடையின் முன்னே நின்றுகொண்டிருந்தான் ஒரு சிறுவன். கடையில் காணப்பட்ட பொருட்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் அவன். சிறுவனின் ஏக்கப் பார்வை கடைக்காரருக்கு சந்தேகத்தை எழுப்பியது. 'கடையில் பொருள் ஏதாவது வேண்டுமா?' என்று கடைக்காரர் கேட்டார். எதுவும் பேசாது மௌனமாக நின்றுகொண்டிருந்தான் சிறுவன். மீண்டும் வினயமாகக் கேட்டார் கடைக்காரர். மீண்டும் பேசாமலிருந்தான் சிறுவன். கடைக்காரருக்குக் கோபம் வந்துவிட்டது. கடையை விட்டு வெளியேறும்படி சிறுவனைப் பார்த்து [illegible] சிறுவனோ அவரைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் தொடர்ந்து விளையாட்டுப் பொருட்களையே பார்த்துகொண்டு நின்றான். கடைக்காரர் தன் இருக்கையை விட்டு எழும்பி வந்து அப்பையனைப் பலாத்காரமாகத் தோளில்பிடித்து வீதியில் தள்ளிவிட்டார். அடுத்த நிமிடம் கடையில் கண்ணாடி யன்னல்கள் சிறுவன் விட்டெறிந்த பெரிய கல்லொன்றினால் சிதறப்பட்டுவிட்டன. கடைக்காரர் உடனே சிறுவனைப் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்துவிட்டார். பொலிசார் இந்தச் சிறுவனை விசாரித்தபொழுது அவன் காது கேளாத செவிடன் எனத் தெரியவந்தது. அத்துடன் அச்சிறுவன் குடும்பநிலைமை மிகவும் பரிதாபமானதாம்.

இளம் குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் இந்தப் புரட்சிகரமான திட்டம் ஒரு வலிமை வாய்ந்த இயக்கமாக மாறியுள்ளது. சமூகத்திற்கு விரோதமான குற்றங்களைச் செய்யத் தூண்டும் இயல்பினை பிஞ்சிலேயே கிள்ளி எறிந்துவிட்டால் சமுதாயத்தில் குற்றவாளிகள் என்ற கூட்டமே இருக்க முடியாது.

பாக். ராணுவ அட்டூழியங்கள்

முஸ்லிம் பிரமுகர்கள் கண்டனம்

புதுடில்லி, மே 16

"கிழக்குப் பாகிஸ்தானில் அறிஞர்களையும் சிந்திக்கும் [illegible]களையும் திட்டமிட்டு தொலைத்துக் கட்டிவிட்ட" ஆட்சியினர் மக்களை [illegible]டிவிட்டு கொலை ராணுவத்தை தூண்டுகின்றனர்".

இப்படி கூறினார் இந்திய யூனியன் தொழில் அபிவிருத்தி அமைச்சர் மொஹினுல் ஹக் சவ்துரி.

பாகிஸ்தான் ராணுவம் கைப்பற்றும் பங்களாதேச தலைவர்களினதும் அறிஞர்களினதும் கரங்களைபின்னால் கட்டி வெடிவைத்துக்கொன்றுவிட்டு அவர்களை நல்லடக்கம் செய்யக் கூட தடை மொஹினுல் ஹக் கூறினார்.

எல்லைப் பிரதேசங்களில் அகதிகளையும் பிரமுகர்களையும் சந்தித்துவிட்டு திரும்பிய அமைச்சர் இப்படி கூறினார்.

இதற்கிடையில் "நிராயுதபாணிகளான பங்களா தேச மக்கள் மீது படுபாதகமாக அட்டகாசம் நடத்தும் பாகிஸ்தான் ராணுவ ஆட்சியினரின் போக்கு" குறித்து "ஆழ்ந்த துயரத்தை" தெரிவிக்கும் தீர்மானமொன்றை காஷ்மீர் சட்டசபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

இதை ஸயீத் நஸீர் ஹுஸைன் ஸம்னானி சமர்ப்பித்தார். "பங்களா தேச மக்கள் அனைவருக்கும் எதிராக நடத்தப்படும் மிருகத்தனமான நடத்தை குறித்து மனிதகுலத்தின் மனச்சாட்சியை தூண்டிவிட வேண்டிய தேவை மேலும் ஏற்பட்டுள்ளது" என்று தீர்மானம் கூறுகிறது.

அடுத்த மாதம செயல்படும்?

உடுப்பிட்டி, திங்கள்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் உருவாகிவரும் சத்திர சிகிச்சை நிலையம் எக்ஸ்ரே பரிசோதனை நிலையம் ஆகிய இரண்டும் அடுத்த மாதம் முதல் செயற்பட ஆரம்பிக்குமெனத் தெரியவருகிறது

ஏற்கனவே இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த சத்திர சிகிச்சை எக்ஸ்ரே உபகரணங்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டதற்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்வுபகரணங்களும் கருவிகளும் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்குத் திருப்பி யனுப்பிவைக்கப்பட்டுள்ளனவாம்.

உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி இதுசம்பந்தமாக முயற்சி மேற்கொண்டிருந்தார்.

……

அரசாங்கம் பொறுப்பேற்கிறது

குருநகர், திங்கள்

தீவுப்பகுதிகளில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை இம்மாதம் 23-ம் திகதியுடன் அரசாங்கம் பொறுப்பேற்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை கூட்டுறவு இலாகா செய்துள்ளது. தீவுப்பகுதியில் இயங்கிவரும் சங்கங்கள் தற்பொழுது மூன்றுபிரிவாக இணைக்கப்பட்டுள்ளன.

வேலணை மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகியவை ஒருசங்க நிர்வாகத்தின்கீழ் இயங்கவிருக்கின்றன. இதேபோன்று புங்குடுதீவு ஒரு சங்கமாகவும், நெடுந்தீவு ஒரு சங்கமாகவும், நாரந்தனை, சுருவில், காரம்பன், ஊர்காவற்றுறை ஒருபிரிவாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

……

நோயாளிகளுக்கு பாஷன் பழரசம்

கோட்டை, திங்கள்

தோடம்பழங்கள் கிடைக்காத நேரத்தில் ஆஸ்பத்திரிகளுக்கு பாஷன்பழ ரசத்தை வழங்க விற்பனை இலாகா தீர்மானித்துள்ளது

விற்பனை ஆணையாளர் சுகாதார இலாகாவுடன் கலந்தாலோசித்த பின்னரே மேற்படி தீர்மானத்தை யெடுத்துள்ளார். சுகாதார இலாகா அதிபர் டாக்டர் கே. ராஜசூரியர் மேற்படி பழரசத்தை தோடம்பழம், தோடம்பழ ரசம் ஆகியன இல்லாத வேளையிலேயே கொடுக்கவேண்டும் அறிவித்துள்ளார்.

— —

விளையாட்டுத் துறையில்

உடுப்பிட்டி, திங்கள்

வடமராட்சி தெற்கு-மேற்கு காரியாதிகாரி பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களை ஊக்குவிக்கும் முயற்சியில் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கிராமசேவையாளர் பகுதியிலிருந்தும் உதைபந்தாட்டம், கிரிக்கெட் ஆகியவற்றில் திறமைவாய்ந்த விளையாட்டுக் கழகங்களைத் தெரிவுசெய்து காரியாதிகாரியிடம் விளையாட்டுக் கழகங்கள் பற்றிய பட்டியலைச் சமர்ப்பிக்கும் வேலையில் கிராமசேவையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலுமுள்ள விளையாட்டுக் கழகங்களிலிருந்து தெரிவுக் கோஷ்டி யொன்று தெரிவுசெய்யப்படும். காரியாதிகாரி பிரிவுகளுக்கிடையே நடைபெறும் சுற்றுப் போட்டிகளில் இவை ஈடுபடும்.

வர்த்தக மாணவர் கூட்டம்

உடுப்பிட்டி, திங்கள்

"நாட்டின் பொருளாதாரத்தில் வர்த்தக மாணவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும். வர்த்தகக்கல்வி மூலமே பொருளாதாரத்தைப் பெருக்கவும், நாட்டை முன்னேற்றவும் வேண்டிய அறிவையும், திடத்தையும் பெறமுடியும் வர்த்தகம், பொருளாதாரம் போன்ற பாடங்களை நாம் தக்கமுறையில் பயன்படுத்த வேண்டும்" என இலங்கை வர்த்தக மாணவர் சங்க கூட்டத்தில் பேசுகையில் பொதுச்செயலாளர் திரு. அ. தேவச்சந்திரன் குறிப்பிட்டார். திரு. சதா: நடேசன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

— —

தற்கொலை

பருத்தித்துறை, திங்கள்

புத்தூர் மேற்கு நவக்கிரியைச் சேர்ந்தவரும் முன்னாள் புத்தூர் கிராமசபை உறுப்பினருமான திரு. எஸ். தனஞ்செயன் (வயது 45) நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார். மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்

காணிக்கச்சேரி

குருநகர், திங்கள்

விஸ்வமடு படித்தவாலிபர் குடியேற்றத்திட்டத்திற்கான காணிக்கச்சேரி இம்மாதம் நடைபெறவிருக்கின்றது. தீவுப்பகுதியிலிருந்து விண்ணப்பம் செய்தவர்களுக்கான தெரிவு இம்மாதம் 26-ம் திகதி ஊர்காவற்றுறை காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெறும்.

— —

முந்திரிகை மூலம் வருமானம்

உடுப்பிட்டி, திங்கள்

கரணவாய் தெற்கு, மண்டான் குடியேற்றத்திட்டத்தில் முந்திரிகை உற்பத்தி அமோக விளைச்சலைப் பெற்றுள்ளது; மண்டான் விவசாயிகள் முந்திரிகைச் செய்கை மூலம் அதிக வருமானம் பெற்றுவருகின்றனர்.

தீவுப்பகுதி ப. நோ. கூ. சமாசத்தை அரசு பொறுப்பேற்கும்

குருநகர், திங்கள்

கூட்டுறவுச் சங்கங்களை அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கான அரசாங்கத்தின் கூட்டுறவு அபிவிருத்தித் திட்டத்திற்கமைய சங்கங்களின் தொகையை அரசாங்கம் குறைத்துவரும் இக்கட்டத்தில் தீவுப்பகுதியில் இருந்துவந்த இருபதுக்கு மேற்பட்ட சங்கங்கள் ஆறு சங்கங்களாக குறைக்கப்பட்டு தீவுப்பகுதி ப நோ. கூ சமாசம் உருவாக்கப்பட்டுள்ளது. உச்சங்கங்களை ஜூன் மாதம் 26-ம் திகதி அரசாங்கம் பொறுப்பேற்க இருப்பதாக அறியப்படுகிறது.

……

மலேசியாவுக்கு சீன வர்த்தக தூதுகோஷ்டி

பீக்கிங், மே 17

சீனா மலேசியாவுக்கு வர்த்தகத் தூதுகோஷ்டி ஒன்றை அனுப்புவதற்கு முடிவுசெய்துள்ளது. மலேசியாவிற்கு சீனாவின் வர்த்தக தூதுகோஷ்டி ஒன்று செல்வது இதுவே முதற் தடவையாகும்

பண்டத்தரிப்பு

பஸ் பிரயாணிகள் சங்கம் கோரிக்கை

அராலி, திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து பண்டத்தரிப்புக்கு அராலிக்கு ஊடாக நடைபெற்று வந்த பஸ் சேவையைத் தொடர்ந்து நடத்துமாறு அராலி பஸ்பிரயாணிகள் சங்கம் இ.போ. சபை வடபிராந்திய முகாமையாளரைக் கேட்டுள்ளது. இச்சேவை திடீரென நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அராலியிலிருந்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்குச் செல்லும் மாணவிகள் பெரிதும் கஷ்டமடைந்துள்ளனர் என பிரஸ்தாப பிரயாணிகள் சங்கம் பிராந்திய முகாமையாளரிடம் தெரிவித்துள்ளனர்.

Shell Chemicals
SHELL
weedkiller
Planavin
CAUTION

உங்கள் வெங்காயம் மிளகாய்த் தாவரங்களைத் தாக்கும் களைகளைக் கட்டுப்படுத்த செலவு என்னவாகிறது?

'பிளனவின்' பாவிப்பின் ஏக்கருக்குச் செலவு ரூ. 50/- மட்டுமே! ஏனைய களைக் கொல்லிகள் பாவனைச் செல்வில் அரைவாசி இது.

'பிளனவின்' ஓர் புதிய களைக் கொல்லி. சகல களைகளையும் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல விளைச்சலையும் பெருக்க வல்லது. விசேஷமாக வெங்காயம், மிளகாய் மற்றும் சிறுதுணை உணவுத்தாவரங்களைத் தாக்கும் களைக் கட்டுப்பாட்டிற்கும் சிறந்தது.

உங்கள் செலவை அரை மடங்காக்கி இலாபத்தை இருமடங்காக்க 'பிளனவின்' பாவியுங்கள்!

LANKEM

இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்

லங்கெம் இலங்கை லிமிட்டெட்

சிலிங்கோ கட்டிடம் த. பெ. 918 கொழும்பு

டெலிபோன்: 28333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த பத்தாண்டுகளில்

உலக கல்வித்துறையில் ஏற்படவிருக்கும் நவீன மாற்றங்கள்

யுனெஸ்கோ நிபுணர் வெளியிடும் தகவல்கள்

அடுத்து வரும் ஆண்டுகளில் உலகின் கல்வி நிலையில் எத்தகைய புதிய மாற்றங்களும் அபிவிருத்தியும் ஏற்படும் என்பது குறித்து விளக்குகிறார் இக்கட்டுரை ஆசிரியர். இவர் யுனெஸ்கோ உயர் கல்வி இலாகாவின் அதிபர் ஆவர்

இன்றுபாடத்திட்டமானது மாணவர்களதோ அன்றி நாட்டினதோ தேவைக்கேற்ற வகையில் அமையவில்லை என்பது குறித்து உலக நாடுகள் கவலைப்படுகின்றன. எதிர்காலத்தை நன்மை பயக்கத்தக்கதாக உருவாக்கத்தக்க வகையில் திட்டங்களைத் தீட்டி செயல்பட வேண்டிய நேரத்தில் இப்பாடத் திட்டமானது மெதுவாக மாற்றமடைந்து கடந்தகால திட்டங்களையே பிரதிபலிப்பதாக இன்னமும் உள்ளது

அலங்காரப் பேச்சு

நாம் எதைப் படிப்பிக்கின்றோமோ எவ்வாறு படிப்பிக்கின்றோமோ இதற்கான வசதிகள் எப்படியிருப்பினும் நாங்கள் இளமைப் பருவத்தில் பாடசாலைக்குச் செல்லத்தக்கதாக உள்ள மாணவர்களுக்கு கல்விக்கான வாய்ப்பு வரையறுக்கப்பட்டதாக அதாவது குறைவாகவே உள்ளதாக மேற்படி நாடுகள் கவலைப்படுகின்றன. வாழ்க்கை பூராவும் கல்வியளிக்க வேண்டுமென்பதே எதிர்காலத்தில் கல்வியின் குறிக்கோளாகும், ஆனால் வாழ்க்கை பூராவும் கல்வியளிப்பதென்னும் நல்லதொருகருத்தானது இதுவரைகாலமும் ஒரு அலங்காரப் பேச்சாகவேயுள்ளது எந்த வயதினரதும் விருப்பையும் தேவையையும் பூர்த்தி செய்வதற்கு எங்களுக்கு எத்தகைய மாதிரியான கல்வி நிலையம் வேண்டும் இந்தக் கல்விநிலையங்கள் என்ன விதமான புதிய போதனை முறையையும் கல்வி வசதிகளையும் கொண்டிருக்கும். இத்தகைய நிறுவனங்களின் நடவடிக்கைகள் அவை இயங்கும் முறைகள் ஆகியன குறித்து கல்விநிலையம் ஒன்று எவ்வாறு அமையவேண்டும் அவற்றை நடாத்த ஆசிரியர்களை எவ்வாறு நியமிக்க வேண்டும் என்பது குறித்துப் புனராலோசனை செய்தல் அவசியமாகும்.

ஆராய்ச்சிக் கல்விக்கும், கல்வி சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் புதிய வகையிலான கல்வியாராய்ச்சி நிறுவனங்கள் இன்று உலகின் பல நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ளன.

ஆசிரியத்தொழிலின் தன்மைமாறும்

இவையாவற்றுள்ளும் ஆசிரியரின் பங்குஎன்ன? அடுத்த பத்து ஆண்டுகளில் ஆசிரியரது வேலையில் மாற்றம் படிப்படியாக ஏற்படும் என நான் நினைக்கிறேன். தனக்கென ஒரு எல்லையை வரையறை செய்து கொண்டு வகுப்பறைக்குள்ளே அடைந்து கிடக்கும் நிலை வருங்காலத்தில் ஆசிரியருக்கு ஏற்படாது. பல துறைகளில் விசேஷ போதனைகள் கல்வி முறைகள் இவற்றிற்கான கருவிகள் ஆகியவற்றைக் கொண்டதொரு உற்பத்திசாலையையுடையவராக இவ்வாசிரியர் மாறுவர். இவையாவும் பாடசாலையில் கிடைக்கக் கூடியதாகவிருக்கும். அத்துடன் ஆசிரியரது வேலை மேலும் தெளிவானதாகவும் விரிவுடையதாகவும் அமையும். அத்துடன் இவ்விரிவான திட்டத்திற்கேற்ற வகையில் தற்போது இல்லாத புதிய எண்ணற்ற சாதனங்களும் கிடைக்கும். சகலவிதமான விசேஷ தொழில்நுட்பங்களும் அவ்வாசிரியருக்குத் தெரிந்திருக்க வேண்டும். இவர் தன் உதவி செய்வதோடு மற்றும் விசேஷ நிபுணர்களின் உதவியையும் பெறுவர். இதனால் ஆசிரியத் தொழிலின் தன்மை முன்னெருபொழுதுமில்லாதவாறு மாற்றமடைவதோடு பெரும் நன்மை பயப்பதாயும் வருவாயுடையதாகவும் திருப்தியளிப்பதாகவும் அமையும் என நான் நினைக்கிறேன். இதனால் நாமென்ன செய்யப்போகிறோம் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்,

தற்போது தனிப்பட்ட வகுப்பறையில் சுயமாக ஆசிரியரொருவரால் கவனிக்கப்படும் வேலைகள் யாவும் இப்புதிய கல்வி நிலையத்தில் பகிர்ந்து அளிக்கப்படும். திட்டமிடுதல் கல்வியளித்தல் ஆகியன தனிப்பட்ட ஒருவரால் மேற்கொள்ளப்படாது குழுக்களால் கவனிக்கப்படும். மேலும் மாணவர்கள் தங்கள் கல்வியைப் பற்றி திட்டமிடவும் ஒருவருக்கொருவர் கற்க உதவுவதற்கும் இடமளிக்கும். அதாவது ஆசிரியர்கள் ஆசிரியர்களுடன் கலந்து ஒருவருக்கொருவர் சொல்லிக் கொடுப்பதாகும் பின் ஆசிரியர் மாணவருக்கு சொல்லிக் கொடுப்பர். பின்னர் மாணவர் மாணவருக்குச் சொல்லிக் கொடுப்பர்.

சமூகமும் பள்ளிக்கூடமும் ஒன்றாகும்

இத்தகைய புதிய மாற்றங்கள் ஏற்பட பள்ளிக்கூடங்கள் படிப்படியாக தேவைக்கேற்ற இடவசதி சாதனங்களின் வசதி ஆகியவற்றோடு கூடிய போதனை நிலையங்களாக மாறும். இதனால் சகல வசதியினருக்கும் வாழ்நாள் பூராவும் கல்வி பயிற்றுவிக்கும் நிலையமாக அமையும். அதாவது ஒரு ஜனசமூக நிலையம் போன்று அமையும்.

அடுத்த 10 ஆண்டிற்குள் இத்தகைய நிலைமையைக் காணலாம். அதாவது பாடசாலைகள் ஒருநாளைக்கு 18 மணித்தியாலங்கள்வேலை செய்வதை நாம்காணலாம். இவற்றில் முழுச்சமூகத்தினருக்கும் பயன்படத்தக்கவாறு [illegible] கல்வியளித்தல் கல்வி கற்றல் ஆகியவற்றோடு கலாச்சார பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் இடம்பெறும் இத்தகைய ஒரு மாற்றம் ஏற்படின் அது மாணவர்களது சூழலை வளமுடையதாக்கும். ஒரு சமூகத்துக்குரிய பாடசாலையை அச்சமூகத்தோடு நெருங்கிய தொடர்புபடுத்திவிடும்,

......

வீதிதிருத்த கோரிக்கை

வேலணை, திங்கள்

வேலணை வங்களாவடியிலிருந்து மண்கும்பான் வரை செல்லும் சாட்டிவீதி திருத்தப்படாதிருப்பதால் இவ்வீதியில் பஸ் சேவை நடத்துமாறு கோரமுடியாதிருப்பதாயும் பல தூரம் நடந்து சென்று பஸ் பிரயாணத்தை மேற்கொள்ளும் இப்பகுதி மக்களின் பிரயாணக் கஷ்டத்தைப் போக்க இவ்வீதிதிருத்தநடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வேலணை இளைஞர் விவசாயக் கழகமும் வேலணை கிராமசீர் திருத்தச் சங்கமும் தொகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்தைக் கேட்டுள்ளனர்.

0 0 0

அராலி, திங்கள்

அராலியிலுள்ளகிழுவானை இலவி தெருவும் அராலி தெல்லிப்பளை வல்லை தெருவில் அராலி வட்டுக்கோட்டை சந்திவரையிலுள்ள வீதியும் வாகனப் போக்குவரத்திற்கு உதவாதநிலையில் சீர்கேட்டைந்துள்ளன இதனால் பஸ் போக்குவரத்தும் துண்டிக்கப்படலாமென் அஞ்சப்படுகிறது! இவ்வீதிகளில்கடந்தமாரிகாலத்தில் வெள்ளம் வடிவதற்காகக்கிராம சபையினால் வெட்டப்பட்ட வாய்க்கால்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன, இவைகள் வாகனப்போக்குவரத்தினை மேலும் இடைஞ்சலாகி சீர்கெட்டிருக்கின்றன இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு அராலி பஸ் பிரயாணிகள்சங்கம்தொகுதி எம். பி. திரு ஆ. தியாகராசாவைக் கேட்டுள்ளது.

......

கிரிக்கெட் சுற்றுப்போட்டி

மாவிட்டபுரம், திங்கள்

தெல்லிப்பழை யங், ரோயல் விளையாட்டுக்கழகம் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடத்தவிருக்கிறது திரு. கதிர்காமநாதன் வெற்றிக் கேடயத்துக்காக நடாத்தப்படும் இச்சுற்றுப் போட்டி அடுத்த [illegible] யாழ் மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் தெல்லிப்பழையில் நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னர் காரியதரிசி யங் ரோயல் விளையாட்டுக்கழகம் தெல்லிப்பழை கிழக்கு என்ற முகவரிக்கு அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது.

உகண்டாவில்

புதிய அரசியல் திட்டத்தை மீறினால் இராணுவ ஆட்சி

ஜனாதிபதி அமீன் எச்சரிக்கை

கம்பாலா - மே 17

உகண்டாவின் புதிய அரசியல் திட்டம் மீறப்படுமானால் திரும்பவும் இராணுவ ஆட்சியே ஏற்படுத்த வேண்டி ஏற்படுமென பொதுமக்களை ஜனாதிபதி திரு அமீன் எச்சரித்துள்ளார்.

அவர் பொதுமக்களுக்கு விடுத்த செய்தியில் உகண்டாவில் ஒரு பரிட்சார்த்தமாகவே ஜனநாயக ரீதியில் தேர்தல் ஒன்றை நடத்த முடிவுசெய்யப்பட்டது. அத்திட்டத்தை மக்கள் மதியாது மீறினால் இராணுவ ஆட்சியைத் திரும்பக் கொண்டுவருவதைத் தவிர வேறு வழியில்லை. நாட்டுக்கு ஆட்சி செய்வதற்கு ஒரே ஒருகட்சிதான்வேண்டுமென்ற கொள்கையை என்னால் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்'

கி. பா. அகதிகளுக்கு

சர்வதேச உதவி கோருகிறார் இந்திரா

புதுடில்லி, மே 17

இந்தியாவுக்குள் வந்திருக்கும் கிழக்கும் பாகிஸ்தான் அகதிகளுக்கு சர்வதேச உதவி தேவைப்படுகிறது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திதெரிவித்துள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குள் வந்திருக்கும் அகதிகள் முகாம்களை பிரதமர் இந்திரா பார்வையிட்டார் அவரது 2 நாள் சுற்றுப்பிரயாணத்தின் பொழுது அகர்த்தலா மேற்குவங்காளத்தில் வடக்குப்பகுதி, 24 பர்கானா மாவட்டம் ஆகிய இடங்களிலுள்ள அகதிகள் முகாம்களை அவர் சென்று பார்வையிட்டதோடு, அகதிகள் குறைகளையும் கேட்டறிந்தார்.

அவர் நிருபர்கள்மத்தியில் பேசுகையில், கிழக்குப் பாகிஸ்தான் விஷயம்பாகிஸ்தானின் உள்விவகாரமாக இருந்த பிரச்னை அங்கிருந்து பெருமளவில் அகதிகள் இந்தியாவுக்குள் வந்திருப்பதினால் இந்தியப்பிரச்னையாக மாறியுள்ளது இந்தப் பெரும் பிரச்னையை இந்தியா மட்டும் தீர்க்கமுடியாது. இதற்கு சர்வதேச உதவி பெருமளவில்தேவை. இந்த உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம். நாங்கள் என்ன சொல்லவேண்டும் என்ன செய்யவேண்டும் என்பது மற்ற நாடுகளின் நோக்கத்தைப் பொறுத்ததல்ல, இங்குவந்திருக்கும் அகதிகளை இங்கேயே வைத்திருக்கும் நோக்கம் எமக்கில்லை. அதேநேரத்தில் அவர்களை பலாத்காரமாக வெளியேற்றவும் மாட்டோம் என்றார்.

இந்தியாவுக்குள் வந்திருக்கும் அகதிகளை பாகிஸ்தான் திரும்ப அழைக்க மறுத்தால் என்ன செய்வீர்கள் என்று நிருபர்கள் கேட்டகேள்வி ஒன்றிற்கு திருமதி காந்தி பதிலளிக்கையில், அகதிகள் பிரச்னையைக்கவனிக்கஉலக ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது; அது கவனித்துக் கொள்ளும் என்றார்.

கிழக்குப்பாகிஸ்தானில் மேற்கு பாகிஸ்தான் இராணுவத்தினர்படுகொலைகள் செய்து வருகிறார்கள். என்பதை உலகம் இப்பொழுது அறிந்துள்ளது. கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் தங்கள் எதிர்காலவாழ்வுக்காக இதைப்போன்ற தியாகங்களைச் செய்யவேண்டியுள்ளது என்றார் திருமதி காந்தி.

பங்களாதேசை இந்திய அரசு அங்கீகரிக்குமா என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு அதுபற்றி ஆராயப்படுவதாகத் தெரிவித்தார்.

சுப்பிரமணியம் கருத்து

பெருமளவு அகதிகள் இந்தியாவுக்குள் வந்திருப்பதினால் இந்தியாவின் திட்ட முன்னுரிமை நிலைகளில் சில மாற்றங்கள் செய்யவேண்டியுள்ளதென கோயம்புத்தூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்திய திட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்

உலகசமாதான சபை கோரிக்கை

புடாபெஸ்ட், மே 17

கிழக்குப்பாகிஸ்தானில் நடைபெறும் இனப்படுகொலைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவருமாறு உலக நாடுகளை கோரும் தீர்மானமொன்றை புடாபெஸ்டில் நடைபெறும் உலக சமாதான சபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

இந்தியா வந்திருக்கும் கிழக்கு பாகிஸ்தானிய அகதிகளுக்கு இந்தியா மட்டும் உதவி அளிக்கமுடியாதென்றும், உலக ஸ்தாபனங்கள் உதவி அளிக்கவேண்டுமென்றும் அச்சபை உலக ஸ்தாபனங்களைக் கேட்டுள்ளது.

— —

உலக சாரணர் விழா

டோக்கியோ, மே 17

ஜப்பானில் உலக சாரணர் விழா ஆகஸ்ட் மாதம் 13-ம் திகதி ஆரம்பமாகிறது; 90 நாடுகள் இந்த விழாவில் கலந்துகொள்கின்றன 21 ஆயிரம் சாரணர்கள் பங்குபற்றுவார்கள்.

மணிவாக்கு

சிங்கம் தன் இரையைக் கொல்வதேபோல் கடவுளின் இன்பங்களை நீ அனுபவி. ஆனால் அந்த ஆனந்த பரவசத்தில் இளைக்க உலகோர் அனைவரையும் எல்லையில்லாத அந்த க்ஷேத்திரத்திற்கு அழைத்து வா.

—ஸ்ரீ அரவிந்தர்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் வைகாசி மாதம் 4-ந் திகதி (18-5-71)

அந்நிய தளங்கள்

இலங்கையில் அந்நியர் எவரும் தளம் அமைப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்களென்றும் எந்த அந்நிய வல்லரசும் தளவசதி கோரவில்லையென்றும் தளம் அமைப்பது சம்பந்தமான அரசாங்கக் கொள்கை சரியாகப் பின்பற்றப்படுமென்றும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அந்நிய வல்லரசு ஒன்று திருக்கோணமலையில் தளம் அமைப்பதற்கு அரசாங்கத்திடம் கேட்டதாக ஆங்கிலத்தினசரி யொன்று தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்ததைத் தொடர்ந்தே அரசாங்கம் தனது நிலையை விளக்கி இந்த அறிக்கையை விடுத்திருக்கிறது. வீண் வதந்திக்கிடமில்லாமல் நிலைமையை அரசாங்கம் தெளிவுபடுத்த ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த அந்தப் பத்திரிகையையும் பாராட்டத்தான் வேண்டும்.

1948-ம் ஆண்டில் இலங்கை சுதந்திரமடைந்த போதிலும் காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிபீடத்துக்கு வந்த பின்னரே திருக்கோணமலைக் கடற்படைத்தளமும், கட்டுநாயகா விமானப்படைத்தளமும் பிரிட்டிஷாரிடமிருந்து விடுவிக்கப்பட்டது. இந்த இரு தளங்களிலிருந்தும் பிரிட்டிஷார் தொல்லையில்லாமல் சென்றபோதிலும் அவர்கள் மனநிறைவோடு சென்றிருக்கமாட்டார்களென்று கருதுவதில் தவறிருக்கமுடியாது. பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டில் இவ்விரு தளங்களுமிருந்தபோதே அதில் அந்நிய வல்லரசுகள் கண்வைக்காமலில்லை.

இந்துசமுத்திரப் பகுதியிலிருந்து பிரிட்டன் தனது தளங்களை மூடுவதென்று சில காலத்துக்கு முன்னர் முடிவுசெய்தபோது இந்து சமுத்திரத்தில் யார் கால் ஊன்றுவதென்றபோட்டி வல்லரசுகளுக்கிடையில் தொடங்காமலில்லை. இந்துமகா சமுத்திரப் பகுதி அந்நிய தளங்களற்ற பிரதேசமாக இருக்கவேண்டுமென்பது இந்தியா, இலங்கை உட்பட இப்பகுதி நாடுகளின் கொள்கையாகும். இந்துமகா சமுத்திரப்பகுதியிலுள்ள நாடுகள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதும் அந்நிய வல்லரசுகள் அங்குவந்து பாதுகாப்பளிக்கவேண்டிய அவசியமில்லையென்பதும் இந்த நாடுகளின் கொள்கையாக இருந்துவருகிறது. என்றாலும் இந்துமகாசமுத்திரப்பகுதியிலுள்ள நாடுகள் தமக்குள் கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றைச் செய்துகொள்ள வேண்டுமென்ற யோசனையையும் சில நாடுகள் தெரிவித்து வந்தன.

இலங்கைசின்னஞ்சிறிய நாடாக இருப்பினும் அது இருக்கும் இடம் உலகில் வேறெந்த நாட்டின் முக்கியத்துவத்துக்கும் குறைந்ததல்ல. திருக்கோணமலைத் துறைமுகம் உலகிலேயே சிறந்ததுறைமுகங்களிலொன்று. இயற்கையாய் அமைந்த துறைமுகமும் கூட.

இந்துமகா சமுத்திரத்தில் கால் ஊன்றவேண்டுமென்ற ஆவலுடன் போட்டிபோட்டுக்கொண்டிருக்கும் வல்லரசுகளுக்கிடையில் திருக்கோணமலைத் துறைமுகம் தென்படாமலிருக்கமுடியாது.

இலங்கை எந்த இராணுவக் கூட்டமைப்பிலும் சேர்ந்ததில்லை; சேரவுமில்லை. நடுநிலைமையே அதன் கொள்கை. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் எல்லைத் தகராறு ஏற்பட்டபோது நடுநிலைமை நாடுகளின் மகாநாட்டைக் கூடி ஆலோசித்து எல்லைச் சண்டையை நிறுத்துவதில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா ஆற்றிய பெரும்பணி உலகறிந்த விஷயம்.

இலங்கையின் நடுநிலைமைக்கொள்கையை அறிந்திருந்தாலும் அதற்கு ஆதரவு தெரிவித்துவந்தாலும் ஆதிக்கப் போட்டியிலீடுபட்டுள்ள வல்லரசுகள் தங்கள் கொள்கையையும் போக்கையும் எந்தச் சமயத்திலும் மாற்றிக் கொள்ளமாட்டாவென்று சொல்லமுடியாது.

எனவேதான் அந்நிய தளங்கள்பற்றிய இலங்கை அரசின் கொள்கையைத் தெளிவுபடுத்த வாய்ப்புக் கிடைத்ததையும் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி நிலைமையைதெளிவாக அரசு விளக்கியதையும் வரவேற்கவேண்டுமென்கிறோம்.

டென்னிஸ்

ஜப்பானில் இந்தியா வெற்றி

டோக்கியோ, மே 17

டோக்கியோவில் நடைபெற்ற ஈஸ்ட் ஸோன் டேவிஸ்கப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது. ஜப்பான் 2 போட்டிகளிலும் இந்தியா 3 போட்டிகளிலும் வெற்றி பெற்றன.

இந்திய வீரர் பிரேம் ஜித்லால் பிரமாதமாக விளையாடி இந்தியாவுக்கு வெற்றியைத் தேடித்தந்தார். இந்தியக் கோஷ்டியின் மானேஜர் திரு. ராமநாதன் கிருஷ்ணன் திரு பிரேம் ஜித்லாலின் ஆட்டத்தை வெகுவாகப் பாராட்டினார்.

இன்டர் ஸோ[illegible] பைனலில் கலந்து[illegible] இந்தியா இப்பொழுது தகுதி பெற்றுள்ளது.

சிதறிய பயங்கரவாதிகள் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளை!

கோட்டை, திங்கள்

சிதறடிக்கப்பட்ட பயங்கரவாதிகள் தனிப்பட்ட வீடுகளிலும், கூட்டுறவு பண்டகசாலைகளிலும் கொள்ளையடித்துவருவதாக பாதுகாப்புப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் நம்படகல என்ற இடத்தில் தனிப்பட்ட இருவீடுகளுக்குள் பயங்கரவாதிகளின் கோஷ்டியொன்று நுழைந்து அங்கிருந்தவர்களைத் தாக்கி, கொள்ளை நடாத்தியுள்ளது. இதேபோன்று கூட்டுறவு பண்டகசாலை சிலவற்றிலும் கொள்ளையடித்திருக்கிறார்கள்.

பக்கமுவவுக்குச் சமீபத்திலுள்ள கூட்டுறவு பண்டகசாலையைக்கொள்ளையடிக்க முயற்சிசெய்தபோது கண்காணிப்புக் குழுவினரால் பயங்கரவாதி ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

வெலிகமுவ என்ற தோட்டத்துக்குள் பிரவேசித்த பயங்கரவாதிகள் அங்குள்ள பங்களா வொன்றைசேதப்படுத்தினார்கள். தோட்டத்திலிருந்த உழவுயந்திரத்தை பயங்கரவாதிகள் தீக்கிரையாக்கினார்கள்.

தியத்தலாவை பகுதிக்கு சமீபத்தில் கொட்டவேவ என்ற இடத்தில் ஆர் எஸ் விஜயரத்தின என்ற பயங்கரவாதத் தலைவன் ஒருவன் கைதுசெய்யப்பட்டான். தியத்தலாவை ராணுவ முகாம்மீது தாக்குதல்நடாத்துவதற்கு இவன் திட்டம் வைத்திருந்தானாம்.

மொனராகலையில் பாதுகாப்புப்படை பயங்கரவாதிகளின் மறைவிடங்கள்மீது தாக்குதல் நடாத்தியது. ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயத்துக்குள்ளானார்கள். இந்த இருவரும் பின்னர் கைதுசெய்யப்பட்டார்கள்.

கேகாலையிலும் நேற்று பாதுகாப்புப்படை பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. நேற்று மட்டும் கேகாலை பகுதியிலிருந்து 45 பயங்கரவாதிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 17 பேர் கைதானார்கள். 28 பேர் சரணடைந்தார்கள்.

......

அரசாங்க அதிபர்களிடம் புனருத்தாரண வேலைகள்

கோட்டை, திங்

புனருத்தாரண வேலைகளை மேற்கொள்ளும் பொறுப்புக்களை அரசாங்க அதிபர்களிடமும், காரியாதிகாரிகளிடமும் ஒப்படைக்கப்படவிருக்கிறது. இதற்கான மாநாடு ஒன்று இம்மாத முடிவுக்குள் கொழும்பில் நடைபெறும்.

பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டமைச்சினால் ஒழுங்கு செய்யப்படவிருக்கும் இம்மாநாட்டில் புனருத்தாரண வேலைகள் சம்பந்தமாக சகல அரசாங்க அதிபர்களுக்கும் விளக்கப்படும். கிராம சேவகர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய வேலைகள் பற்றியும் இதில் தெரிவிக்கப்படும்.

......

அரசாங்க ஊழியர் வெளிநாடு செல்லலாம்

கோட்டை, திங்கள்

வெளிநாடுகளுக்கு உபகாரச் சம்பளக் கல்விவசதி பெற்றுச்செல்லும் அரசாங்க ஊழியர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் இப்போது தளர்த்தப்பட்டுள்ளது. ஆயினும் விவாதமன்றங்களில் கலந்துகொள்ளவோ, பிரயாண நிதிவசதி பெற்றோ அவதானிப்பாளர்களாகவோ வெளிநாடு செல்வோருக்கான கட்டுப்பாடுகள் மேலும் அறிவித்தல்வரும் வரை அமுலில் இருக்கும்; சகல நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், இலாகாத் தலைவர்களுக்கும் பிரதமரின் காரியதரிசியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

— —

கூட்டுறவு ஆணையாளருக்கு கடிதம்

குருநகர், திங்கள்

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக பொதுக்கூட்டம் கூட்டப்படாது இயங்கிவரும் மண்டைதீவு பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தை உடன் கூட்ட நடவடிக்கை எடுக்குமாறும், புதிய நிர்வாகத்தை தெரிவு செய்யுமாறும்கோரும் கடிதமொன்றை மண்டைதீவு தெற்கு கிராமமுன்னேற்றச் சங்கம் கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

புதிர்ப்போட்டி முடிவுகள்

'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்ப்போட்டி முடிவுகள் நாளை 19-5-71 புதன்கிழமை வெளிவரும்.

நாரம்மல பகுதியில் 12 பயங்கரவாதிகள் பலி

கோட்டை, திங்கள்

அனுராதபுர காடுகளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயங்கரவாதிகள் இப்பொழுது நாரம்மல பகுதியிலுள்ள விசாலமான காடுகளில் தங்குமிடங்களை அமைத்துக்கொள்ள முயற்சி செய்கிறார்களாம்.

இவ்வாறு காடு அடர்ந்த மலைகளின் உச்சிகளில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகளை சிதறடிப்பதற்கு ஆயுதப்படையினர் புதிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளார்கள்.

இப்பகுதியில் துவான்கிரி மலை, ஹக்வெலிமலை ஆகியவற்றில் உள்ள காடுகளில் முன்னர் பௌத்த பிக்குகள் வாசஸ்தலம் அமைத்துக்கொண்டிருந்தார்கள் இப்போது பயங்கரவாதிகள் குடியேறிவிட்டார்கள்.

சுமார் 100பேருக்கு மேற்பட்ட பயங்கரவாதிகள் இப்பகுதியில் ஒழித்திருப்பதாக நாரம்மல பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் அங்கு தாக்குதல் நடாத்தப்பட்டது.

இந்தத்தாக்குதல்களின் போது இரண்டுஇளம்பெண்கள் உட்பட 12 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

மேலும் அநேகர் காயமடைந்துள்ளனர். இப்போராட்டத்தில் ஆயுதப்படையினர் எவருக்கும் சேதம் ஏற்படவில்லையெனவும் பயங்கரவாதிகளின் ஏராளமான ஆயுதங்களையும் மருந்து வகைகளையும் ஆயுதப்படையினர் கைப்பற்றினர் எனவும் கூறப்பட்டது.

மரண அறிவித்தல்

சி. கதிர்காமத்தம்பி (கண்மணி)

மகாஜனக்கல்லூரி விடுதிச்சாலை மேற்பார்வையாளரும் இளைப்பாறிய பொலிஸ் சார்ஜண்டுமான திரு. சின்னப்பு கதிர்காமத்தம்பி [கண்மணி] அவர்கள் நேற்று சிவபதமடைந்தார்கள். இவர் மகேஸ்வரியின் அருமைக் கணவரும் இளைப்பாறிய தபால்நிலைய அதிபர் திரு. சி. சின்னத்தம்பு, திரு. சி. நல்லதம்பி ஆகியோரின் சகோதரரும், திரு. சு. பொன்னையா [சுங்க இலாகா], திரு. சு. நல்லையா (மலாயா). திரு. க. செல்லையா [இங்கிலாந்து] திரு. க. அப்புத்துரை [காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை], திரு. சு. இராசையா [கப்பிட்டல் தியேட்டர்]. திருமதிகள் தங்கம்மா கனகசபை, சரஸ்வதி கனகராயர், இராஜேஸ்வரி நன்னித்தம்பி, பஞ்சரத்தினேஸ்வரி சிவசுப்பிரமணியம். மங்களேஸ்வரி விஜயரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக இன்று [18-5-71] செவ்வாய் பிற்பகல் 1-00 மணியளவில் கீரிமலை [illegible] மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

2619

மரண அறிவித்தல்

திருமதி சிதேவி

கரணவாய் தெற்கைச் சேர்ந்த பிரபல சமூக ஊழியர் திரு. க. செல்லத்துரை ஆசிரியர் அவர்களின் தாயார் திருமதி சிதேவி கந்தப்பு காலமாகிவிட்டார். மரணச் சடங்குகள் இன்று (18-5-71) செவ்வாய்க்கிழமை பி. ப. 2-00 மணிக்கு கரணவாயில் நடைபெறும். அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

2482

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட்டுக்காக [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.